**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| CC No. | : | 38/2020 |
| Name | : | Vignesh |
| P.W. | : | 1 |
| Father Name | : | Ravishankar |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.06.2024

**1 மற்றும் 2 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர்**

**அரசு வழக்கறிஞரிர் ஆஜரில்லை என்பதால் எதிரி மற்றும் வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது மிடாப்பாடியில் வசித்து வருகிறேன். வெல்டிங் வேலை செய்கிறேன். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு மாலை 5-6 மணிக்கு நான் சாமிநாதபுரம் ஆற்றில் பூ போடுவதற்காக வந்த போது பூ போட்டுவிட்டு வந்த போது என்னை ஆஜர் எதிரிகள் இருவரும் சேர்ந்து இங்க எதற்கு வந்து பூ போடுகிறாய் என்று கேட்டு என்னை

கெட்ட வார்த்தையால் கடுமையான தகாத வார்த்தையால் திட்டினார்கள் . நான் ஏன் இப்படி பேசுகிறீர்கள் நானும் திருப்பி போடா, வாடா என்று பேசிய போது எதிரிகள் இருவரும் சேர்ந்து பீர் பாட்டிலால் என் பின் தலையில் அடித்தார்கள் ரத்தம் வந்ததது. நான் மடத்துக்குளம் மருத்துவமனையில் மேற்படி காயத்திற்கு சிகிச்சையில் இருந்தேன். நான் மருத்துவமனையில் இருந்த போது போலீசார் வந்து என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

போதிய வாய்ப்பு கொடுத்தும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.06.14 14:44:07 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 38/2020 |
| Name | : Premkumar |
| P.W. | : 2 |
| Father Name | : Thiyagaraj |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.06.2024

**1 மற்றும் 2 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர்**

**அரசு வழக்கறிஞரிர் ஆஜரில்லை என்பதால் எதிரி மற்றும் வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது வயலூரில் வசித்து வருகிறேன். ஒர்க் ஷாப்பிற்கு சென்று வருகிறேன். அ.சா.1 எனது நண்பர் ஆவார். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு மாலை 6 மணிக்கு நான் சாமிநாதபுரம் ஆற்றில் பூ போடுவதற்காக இருவரும் வந்த போது பூ போட்டுவிட்டு வந்த போது அ.சா.1யை ஆஜர் எதிரிகள் இருவரும் சேர்ந்து இங்க எதற்கு வந்து பூ போடுகிறாய் என்று கேட்டு அ.சா.1யை திட்டி வாக்குவாதம் ஏற்பட்டது. பின்பு அ.சா.1 யை எதிரிகள் இருவரும் சேர்ந்து கீழே தள்ளிவிட்டு பாட்டிலால் பின் மண்டையில்

அடித்தார்கள் அதில் ரத்தம் வந்தது. கூட்டம் கூடிவிட்டது. ரோட்டில் எல்லாரும் வந்தார்கள் பிரச்சனை செய்தவர்கள் ஓடிவிட்டார்கள். பின்பு அ.சா.1 மடத்துக்குளம் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேரிர்த்தோம். அங்கு வந்து போலீசார் விசாரித்தார்கள். என்னையும் விசாரித்தார்கள்.

போதிய வாய்ப்பு கொடுத்தும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.06.14 14:44:13 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்